දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) NA/04/TUTOR/2015
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2016.12.23
Date )

සෞඛ්‍ය පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரம், போஷணை மற்றும் சுதேசவைத்திய அமைச்சு
Ministry of Health, Nutrition & Indigenous Medicine


பொதுச் சுற்று நிருபக் கடித இலக்கம் : 02 - 87/2015 (3)

பிரதிப் பணிப்பாளர் நாயகம் (இலங்கை தேசிய வைத்தியசாலை)
மத்திய அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அனைத்து
போதனா வைத்தியசாலை பணிப்பாளர்கள்,
அனைத்து பொது வைத்தியசாலை பணிப்பாளர்கள்,
விசேட திட்டங்களின் பணிப்பாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கும்.

## தாதியர் உயர் கற்கைப் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2015

தாதியர் உயர் கற்கைக் கல்விப் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015 என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 02 - 87/2015 இலக்கமுடையதும் 2015.09.17ம் திகதிய சுற்று நிருபம் மற்றும் அச்சுற்று நிருபத்தினை திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ள 02 - 87/2015 (1) இலக்கமுடையதும், 2015.09.29ம் திகதிய பொதுச் சுற்று நிருபம் மற்றும் 02 - 87/2015 (2) இலக்கமுடையதும், 2015.10.10 ம் திகதிய பொதுச் சுற்று நிருபம் ஆகியன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளைக்கு அமைய கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

02. 02 - 87/ 2015 இலக்கமுடையதும் 2015.09.17ம் திகதிய பொதுச் சுற்றுநிருபத்தின் 03 (தகைமைகள்) தலைப்பின் கீழ் விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தியிருக்க வேண்டிய தகைமைகள் தொடர்பான பந்தியில் தொடர் இலக்கம் 03 ன் கீழ் காட்டுப்பட்டுள்ள தகைமைகளான "அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை நடைமுறைக்கு அமைய பதவியுயர்வு திகதிக்கு முந்திய வருடத்தினுள் (01) திருப்பதிகரமான மட்டத்தை விட கூடிய செயலாற்றுகையினை காட்டியிருத்தல் வேண்டும்" என்ற தகைமையானது இந்த ஆட்சேர்ப்புக்கு மாத்திரம் இயைபானவகையில் இத்தால் நீக்கப்படுகின்றது.

03. அவ்வாறே 02 - 87/ 2015 இலக்கமுடையதும் 2015.09.17ம் திகதிய சுற்று நிருபத்தில் இலக்கம் 3.3ல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டோ / பூரணப்படுத்தப்படாதோ இதுவரை விண்ணப்பித்துள்ள தாதிச் சேவை உத்தியோகத்தர்கள் இந்த திருத்தம் செய்யப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் கீழ் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்பதுடன் அவர்களினால் முன்னளிப்புச் செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள் இந்த சுற்று நிருபத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் முன்னளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக கருதி செயற்படுத்தப்படும்.

04. இந்த மாற்றம் செய்யப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் 2015.10.31ம் திகதி தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக் முடியும்.


385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

05. இந்த சுற்று நிருபத்திற்கமைய விண்ணபம் முன்னளிப்புச் செய்யும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை உரிய நிறுவனத் தலைவரிடம் 2017.01.13 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பாரமளிப்புச் செய்ய வேண்டியதுடன் நிறுவனத் தலைவரினால் உரிய விண்ணப்பங்களில் தமது சிபாரிசினை குறிப்பிட்டு 2017.01.18ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் (நிர்வாகம்) - 01**
**சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,**
**"சுவசிரிபாய"**
**இல - 385**
**வணக்கத்திற்குரி பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை**
**கொழும்பு - 10**

06. அவ்வாறே 02 - 87/ 2015 இலக்கமுடையதும் 2015.09.17ம் திகதிய சுற்று நிருபத்தலும், அந்த சுற்று நிருபத்தின் பிரிவில் மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 02 - 87/ 2015(1) இலக்கமுடையதும், 2015.09.29ம் திகதியுடைய பொது சுற்றநிருபத்தலும் , 02 - 87/ 2015(2) இலக்கமுடையதும், 2015.10.10ம் திகதியுடைய பொதுச் சுற்று நிருபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மாற்றங்கள் எதுவுமின்றி செயற்படுத்தப்படும்.

07. இந்த சுற்று நிருபத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிம் ஆகிய மொழிகளையுடைய சுற்றுநிருபங்களில் ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படின் அப்போது சிங்கள மொழி மூல சுற்று நிருபமே வலுவுடையதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் ஆணையின் படி.

அனுர ஜயவிக்ரம
செயலாளர்
சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

Anura Jayawickrama
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.